**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.3/2021**

2025 –ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 19.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கோச்மேன் (DW–1) | வயது | : | 46/2025 |
| த/க. பெயர் | : | திரு. மாரிமுத்து | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதிகளும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதிகளின் அப்பா பெயர் என்னவென்றால் அவருடைய அப்பா இறந்து ரொம்ப வருடம் ஆனதால் பெயர் எனக்கு தெரியாது, அவரது அம்மா பெயர் அம்சவள்ளி. வாதிகளின் அப்பா உத்திராபதிக்கு இரண்டு மனைவிகள் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதில் அம்சவள்ளி மட்டும் நன்றாக தெரியும். 2ம் பிரதிவாதி பாலையன் அம்மாவின் பெயர் என்னவென்றால் தெரியாது.
2) தாவா சொத்து நான் யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் 2ம் பிரதிவாதி பாலையனிடம் இருந்து வாங்கினேன். தாவா சொத்து பாலையனுக்கு சொந்தம் என்பதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கிரய ஆவணமோ, பாகப்பிரிவினை பத்திரமோ பார்த்தேனா என்றால் இல்லை, கணினி சிட்டா மற்றும் VAO சிட்டா மட்டும் பார்த்துள்ளேன். 2ம் பிரதிவாதி பாலையன் தற்போது எங்கு உள்ளார் என்றால் கண்டிதம்பேட்டையில் உள்ளார். 30 வருடமாக அங்குதான் உள்ளாரா என்றால் 25 ஆண்டுகளாக உள்ளார்.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.21 15:53:31 +0530

District Munsif

Mannargudi.